இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 356 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 20 – சனிக்கிழமை 05 ஆகஸ்ட் 2023 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 356: Thiruvalluvar Year - 2054 - Aadi 20 - Saturday 05 August 2023 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## போரூர், அசோக் நகர், எம்.ஜி.ஆர்.சாலை உள்ளிட்ட சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

# ரூ.178.91 கோடியில் மழைநீர் வடிகால் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு மேற்கொண்டார்!

**சென்னை, ஆக. 5-**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.178.91 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.8.2023) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட எம்.ஜி.ஆர். சாலையில் ரூ.71.31 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள், போரூர் ஏரியில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிய மதகு அமைத்தல் மற்றும் போரூர் ஏரி முதல் இராமாபுரம் ஓடை வரை புதியதாக மூடிய வடிவிலான கால்வாய் அமைக்கும் பணிகள், அசோக் நகர் 4வது நிழற்சாலை மற்றும் அதனை சார்ந்த பகுதிகளில் ரூ.7.60 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், பழவந்தாங்கல் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

### ஆலந்தூர் மண்டலம்!

**பெருநகர சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட எம்.ஜி.ஆர். சாலையில் ரூ.71.31 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை பார்வையிட்டு ஆய்வு**

ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட எம்.ஜி.ஆர். சாலையில் 71 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இப்பணியானது, ஹிந்து காலனி 4வது தெரு மற்றும் எம்.ஜி.ஆர். சாலை சந்திப்பில் ஆரம்பித்து அதன் வழியாக நங்கநல்லூர் 100 அடி சாலை, நங்கநல்லூர் 46வது தெரு, நங்கநல்லூர் 6வது பிரதான சாலை குபேர முனுசாமி சாலை வழியாக வீராங்கல் ஓடையில் சென்றடைகிறது. இதன் மொத்த நீளம் 2.29 கிலோ மீட்டர் ஆகும். இதில் 1.78 கிலோ மீட்டர் பணிகள் முடிவடைந்துள்ளது. மீதமுள்ள பணிகள் இம்மாத இறுதிக்குள் முடிக்கப்படும். இப்புதிய மழைநீர் வடிகால் அமைப்பதன் மூலம் ஹிந்து காலனி, பி.வி நகர் மற்றும் நேரு நெடுஞ்சாலை ஆகிய பகுதிகள் பயனடையும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 12.4.2022 அன்று திறந்து வைக்கப்பட்ட S9 பழவந்தாங்கல் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, காவல் நிலையத்தில் உள்ள பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, பொதுமக்கள் அளிக்கும் புகார்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு தேவையான உதவிகளை செய்திடுமாறு காவல்துறையினரை அறிவுறுத்தினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.8.2023) பெருநகர சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட எம்.ஜி.ஆர். சாலையில் 71 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**போரூர் ஏரியில் ரூ. 100 கோடி மதிப்பீட்டில் புதிய மதகு அமைத்தல் மற்றும் போரூர் ஏரி முதல் இராமாபுரம் ஓடை வரை புதியதாக மூடிய வடிவிலான கால்வாய் அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு**

நீர்வளத்துறையின் பராமரிப்பிலுள்ள போரூர் ஏரியின் நீர்பரப்பு 252 ஏக்கர் ஆகும். இந்த ஏரியின் முழு கொள்ளவு 67 மில்லியன் கன அடி ஆகும். இதன் வலது கரையோரம் 25 மீட்டர் நீளத்திற்கு உபரி நீர் வழிந்தோடி அமைந்துள்ளது. இந்த ஏரியின் மொத்த கரையின் நீளம் 3092 மீட்டர் ஆகும்.

பல வருடங்களாக போரூர் ஏரியிலிருந்து வெளியேறும் உபரி நீரானது மௌலிவாக்கம், மதனந்தபுரம் மற்றும் முகலிவாக்கம் வழியாகச் சென்று முகலிவாக்கத்திலுள்ள இராமாபுரம் ஓடையில் கலந்து மணப்பாக்கம் மற்றும் இராமாபுரம் வழியாகச் சென்று அடையாறு ஆற்றில் சேரும்படி அமைந்திருந்தது. தற்பொழுது உபரி நீர் செல்லும் நிலங்கள் முழுவதும் குடியிருப்பு பகுதிகளாக மாறி விட்டதாலும், ஏரியின் குறுக்கே புறவழிச் சாலை அமைக்கப்பட்டதாலும், ஏரியின் உபரி நீர் வெளியேறுவதற்கு வழியில்லாமல் போரூர் ஏரியின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள கொளுத்துவான்சேரி, சீனிவாசபுரம், பரணிபுத்தூர், பட்டூர் மற்றும் அய்யப்பன்தாங்கல் கிராமங்களில் வெள்ள நீர் சூழ்ந்து பாதிப்பு ஏற்படுகிறது. கடந்த ஆண்டு பருவமழையின் போது மேற்கண்ட பகுதிகள் பெரும் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளானது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 4.12.2021 அன்று போரூர் ஏரியின் வெள்ளப் பாதிப்புகளை பார்வையிட்டு ஆய்வு செய்தபோது, வெள்ளப் பாதிப்புகளை தவிர்க்க பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

அதன்படி, காஞ்சிபுரம் மற்றும் சென்னை மாவட்டங்களில் பருவமழைக் காலங்களில் வெள்ளப்பாதிப்பு ஏற்படாமல் தடுப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.250 கோடி நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் போரூர் ஏரி பகுதியில் வெள்ளப் பாதிப்பு ஏற்படாமல் தடுக்க பணிகள்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## ஆளுநர்களை அரக்கர்களாக மாற்றி- பா.ஜ.க. அல்லாத மாநில அரசுகளை

# அமலாக்கத்துறை - சி.பி.ஐ. மூலம் மிரட்டுவதா?

## மக்களவையில் தயாநிதி மாறன் ஆவேசம்!

**புதுடெல்லி, ஆக.5–**

**வருமான வரித்துறை, சி.பி.ஐ., அமலாக்கத்துறையுடன் கூட்டணி வைத்துக் கொண்டு, மாநில ஆளுநர்களை அரக்கர்களாக மாற்றி, வருகிறது, ஒன்றிய பா.ஜ.க. அரசு. இந்தியா கூட்டணி வலுவாக உள்ளதால் அடுத்து நாங்கள்தான் ஆட்சி அமைப்போம் என்று முன்னாள் ஒன்றிய அமைச்சர் தயாநிதி மாறன் நாடாளுமன்ற மக்களவையில் நேற்று முன்தினம் உரையாற்றினார்.**

**டெல்லி நிர்வாக மசோதாவிற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க. சார்பில் நாடாளுமன்றத்தில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் பேசினார்.**

**அவர் பேசியது வருமாறு:–**

பேச வாய்ப்பளித்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி. சபாநாயகர் சபைக்கு வந்து எதிர்க்கட்சித் தலைவர்களிடம் கோரிக்கை வைத்தது மகிழ்ச்சி அளிக்கிறது. நாங்கள் கேட்பதெல்லாம், சபாநாயகர் நடுநிலையாக இருக்க வேண்டும் என்பதுதான்.

நாங்கள் விரும்பியதெல்லாம், இந்த அமர்வில் மட்டுமல்ல, கடந்த அமர்வின்போதும் அதானி விவகாரம் குறித்து விவாதித்தபோது பிரதமர் சபையில் இருக்க வேண்டும் என்பதுதான்.

மணிப்பூர் பிரச்சினை பற்றி பேச விரும்பினோம்... ஜி20 "வாசுதேவ குடும்பகம் உலகம் முழுவதும் ஒரே குடும்பம்" என்று பேசும் நீங்கள், மணிப்பூர் எரியும்போது... மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள்... 2 பெண்களை பாலியல் பலாத்காரம் செய்து சாலையில் இழுத்து வந்தார்கள் ... பாராளுமன்றத்திற்கு வெளியே பேசுவதற்கு பதிலாக, பிரதமர் சபைக்கு வந்து, அவரது இருக்கையில் அமர்ந்து, கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். நாங்கள் கேட்டது அவ்வளவுதான். சபாநாயகர் அதை உறுதி செய்திருந்தால் அவை அமைதியாக இருந்திருக்கும்! மேலும் சபையில் பயனுள்ள உரையாடல்களை நடத்தியிருப்போம்.



### சி.பி.ஐ., அமலாக்கத்துறை அரசின் கூட்டாளிகள்!

உள்துறை அமைச்சர், "ஆம் ஆத்மி அரசு போராட விரும்புகிறது" என்றதும் பையில் இருந்த பூனை வெளியேறியது, உங்கள் பிரச்சினையை நாங்கள் புரிந்து கொண்டோம். கடந்த 25 ஆண்டுகளாக டெல்லியை உங்களால் ஆட்சி செய்ய முடியவில்லை என்ற விரக்தி உங்களுக்குள் எரிந்து கொண்டிருக்கிறது. மேலும், இப்போது ஆம் ஆத்மி பஞ்சாபிலும் ஆட்சி செய்கிறது. அது எப்படி நடக்கலாம்? எனவே, நீங்கள் இப்போது உங்கள் நண்பர்களையும் கூட்டாளிகளையும் பயன்படுத்துவீர்கள், இடையூறு ஏற்படுத்துகிறீர்கள். நான் சொல்வது உங்கள் அரசியல் கூட்டணிகளை அல்ல... வருமான வரித்துறை, சிபிஐ, அமலாக்கத்துறை, இவைதான் நீங்கள் பயன்படுத்தும் கூட்டாளிகள்.

நான் கேட்கிறேன், உச்சநீதிமன்றம் என்ன சொன்னது? அதன் தீர்ப்பில், காவல்துறை, பொது ஒழுங்கு மற்றும் நிலம் தவிர்த்து டெல்லியின் நிர்வாக சேவைகளின் கட்டுப்பாட்டை தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திடம் ஒப்படைத்தது. இது ஒருமுறை அல்ல இரண்டு முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு! நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள்? நீங்கள் உங்கள் தந்திரங்களை பயன்படுத்துகிறீர்கள். உள்துறை அமைச்சர் பின்பற்றும் ஃபார்முலா எளிமையானது எங்கெல்லாம் பாரதிய ஜனதா கட்சியால் மக்கள் நம்பிக்கையை பெற்று அரசாங்கம் அமைக்க முடியவில்லையோ, அங்கெல்லாம் அமலாக்கத்துறையை அனுப்புவோம்! சிபிஐயை அனுப்புவோம்! எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் எங்களிடம் வருவதை உறுதி செய்வோம். அதுவரை அவர்கள் குற்றவாளிகள் மற்றும் திருடர்கள்.

மகாராஷ்டிராவில் என்ன நடந்தது என்பதை நாங்கள் பார்த்தோம் உங்கள் உறுப்பினர்கள் தேசியவாத காங்கிரஸ் கட்சியை தேசிய ஊழல் கட்சி என்று அழைத்தனர். உண்மையில் உள்ளூர் பா.ஜ.க. உறுப்பினர்கள் தேசியவாத காங்கிரஸ் கட்சியுடன் ஒருபோதும் கூட்டணி வைத்துக்கொள்ள மாட்டோம் என்று கூறினார்கள். ஆனால் உங்களுக்குப் பொருத்தமாக இருக்கும் போது, இதை மாற்றிக்கொள்கிறீர்கள். இன்று மாற்றுக்கட்சியிலிருந்து வருகை புரிந்து, உங்கள் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர்களையே தான் அன்று ED குற்றச்சாட்டின் பேரில் கைது செய்தீர்கள், அவர்களே தான் அன்று சிறையில் வாடினார்கள்! ஆனால் உங்கள் வாஷிங் மெஷின் நிர்மா அதையெல்லாம் மாற்றுகிறது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்